**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.125/2013**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணய்யன் | மதம் | : இந்து |
| த/பெ | : முனிரத்தினம் | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : சின்னகடம்பூர் மோட்டூர் |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**29.04.2025**

<u>**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

4. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் **"15 ஆண்டுகளுக்கு முன்பு 2 தேக்கு செடி, 2 தென்னை மரம், 1 வேப்ப மரம் வைத்து அனுபவித்து வந்தோம்"** என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு தென்னை மரம், வேப்ப மரம், தேக்கு செடி இருப்பதை நிரூபணம் செய்ய கிராம நிர்வாக அலுவலர் சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புல எண்.188/4 ஐ பொறுத்து நான், என் அப்பா, என் சகோதரர்கள் சேர்ந்து அ.வ.எண்.90/2015 தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ 6 உயிலில் உள்ள சொத்துக்கள் சேஷம்மாளுக்கு எப்படி சொந்தம் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் 1918ல் சேஷம்மாள் கிரையம் வாங்கிய பதிவு செய்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சேஷம்மாளின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

6. வா.சா.ஆ 6 உயிலில் புல எண்.16 கிழமேல் 40 கஜம் தென்வடல் 60 கஜம் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் உயில் சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உயில் சொத்தில்தான் வழக்கு சொத்து சம்மந்தப்பட்டுள்ளது. நான் வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. 14.10.1977 தேதியிட்ட கிரைய ஆவணமான வா.சா.ஆ 7 க்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 கிரைய ஆவணம் புல எண்.15/3 மற்றும் புல எண்.16 க்கு தொடர்புடையது என்றாலும் அதில் வழக்கு சொத்து இல்லை என்றாலும் பழைய எண்.16, புதிய எண்.188/4 ஆகும்.

7. பழைய எண்.16, புதிய எண்.188/4 என்பதை நிரூபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் SLR நகல் தாக்கல் செய்துள்ளேன். SLR நகல் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் SLR நகலை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ 7 ஆன 1977 ம் தேதியிட்ட ஆவணத்தில் சொத்தை கிரையம் கொடுத்த நபருக்கு சொத்து எப்படி பாத்தியம் என்பதை காட்ட மூல ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மூல ஆவணம் இல்லை. வழக்கு சொத்தான புல எண்.188/5, 188/6 க்கான பட்டா துரைசாமி மந்தடி மற்றும் சுப்பிரமணி பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அப்போது நாங்கள் நிலஅளவையர் அருகில் இருந்து இடத்தை காண்பித்து சொன்னோம். சர்வேயர் அளந்து சென்றார். 1994 ல் பட்டா கொடுத்துவிட்டார்கள். ஆனால் தற்போதுதான் பிரதிவாதி வீடு கட்டும்போது இடத்தை அளந்தார்கள்.

8. 1994 லேயே வழக்கு சொத்திற்காக பிரச்சனை நடந்தது என்றால் 1994 ல் பிரச்சனை இல்லை. நானும் பிரதிவாதியும் அங்குதான் குடியிருந்தோம். 2013 ல் பிரதிவாதி கழிப்பறை கட்டும்போது அளந்து பார்த்தார்கள். அப்போது தென்வடல் 14 அடிக்கு கிழமேல் 50 அடி எங்கள் இடத்தில் வந்ததால் பிரச்சனை வந்தது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 1994 ல் எங்களுக்குள் பிரச்சனை வந்துவிட்டது என்றாலும் இந்த வழக்கை நான் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தென்வடல் 14 அடிக்கு கிழமேல் 50 அடி எங்கள் இடத்தில் வந்ததாக நான் தற்போது சொல்லும் விவரம் எந்த புல எண்ணில் வருகிறது என்றால் புல எண்.188/4 ஆகும். தென்வடல் 14 அடிக்கு கிழமேல் 50 அடி, புல எண்.188/4 க்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)